# 1.திருக்குறள் - மாதிரி தேர்வு

*Answers given at the end of the page. or click on check answer link*

1. அன்பில்லாதார்க்கு உடலுறுப்புகளால் என்ன பயன் என்ற வினா அமைந்த குறள் எது?

a. கற்றதனாலாய பயன் என்கொல் வாலறிவன் நற்றாள் தொழா அர் எனின்
b. சிறைகாக்கும் காப்பு எவன்செய்யும் மகளிர் நிறைகாக்கும் காப்பே தலை
c. புறத்துறுப்பு எல்லாம் எவன்செய்யும் யாக்கை அகத்துறுப்பு அன்பி லவர்க்கு
d. அன்பின் வழியது உயிர்நிலை அஃதிலார்க்கு என்புதோல் போர்த்த உடம்பு

Check Answer

2. "பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் ………………
………………………………………………… "
மேற்கூறிய திருக்குறளின் படி ஒரு சமுதாயத்தில் தனி மனிதர்களுக்கிடையேயான வேற்றுமைக்குக் காரணமாக இருப்பது :
(i) அவர்களுடைய செயல்களின் தரம்
(ii) அவர்களின் உறவினர்களிடம் இருக்கும் செல்வத்தின் அளவு

a. (i) மட்டும்
b. (ii) மட்டும்
c. (i) மற்றும் (ii)
d. மேற்காணும் எவையும் அல்ல.

Check Answer

3. அறத்திற்கே அன்புசார்ப்பு என்ப அறியார் மறத்திற்கும் அஃதே துணை இக்குறளில் மறத்திற்கும் என்னும் சொல்லில் உம் என்ற விகுதி உணர்வது யாது?

a. அறத்திற்கும் மட்டுமே அன்பு துணை நிற்கும்
b. அறத்திற்கும் மட்டும் அன்று மறத்திற்கும் அன்பு துணை நிற்கும்
c. மறத்திற்கு மட்டும் அன்பு துணை நிற்கும்
d. இவை அனைத்தும்

Check Answer

4. (i) பொய்மையும் வாய்மை யிடத்த …………………. "
(ii) புறந்தூய்மை நீராலமையு மகந்தூய்மை .......... "
இவ்விரண்டு குறள்களையும் ஒருசேர மனதில் கொண்டு கீழ்க்கண்ட எந்த விளைவு மிகுந்த முக்கியத்துவம் உள்ளதாகக் கருதுவீர் ?

a. பொய்மை
b. வாய்மை
c. புறந்தூய்மை
d. புரைதீர்ந்த நன்மை

Check Answer

5. அன்போடு இயைந்த வழக்குஎன்ப ஆருயிர்க்கு என்போடு இயைந்த தொடர்பு இக்குறளில் ஆருயிர் என்னும் தொடர் உணர்த்தும் பொருளைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

a. ஆறுதல் உயிர்
b. அருமையான உயிர்
c. உயிருக்கு உயிரான
d. இவை அனைத்தும்

Check Answer

6. பாலை நிலத்தில் உள்ள வாடிப் போன மரம் போல் என்ற பொருளை உணர்த்தும் தொடர் இடம் பெற்ற திருக்குறளை எழுதுக.

a. என்பி லதனை வெயில்போலக் காயுமே அன்பி லதனை அறம்
b. அன்பின் வழியது உயிர்நிலை அஃதிலார்க்கு என்புதோல் போர்த்த உடம்பு
c. அன்பகத்து இல்லா உயிர்வாழ்க்கை வன்பாற்கண் வற்றல் மரம்தளிர்த் தற்று
d. அறத்திற்கே அன்புசார்ப்பு என்ப அறியார் மறத்திற்கும் அஃதே துணை

Check Answer

7. "ஆகா றளவிட்டி தாயினுங் கேடில்லை
போகா றகலாக் கடை"
– மேற்காணும் குறளில் இருந்து நீவிர் அறிவது யாது?

a. வரவைப் பெருக்குவதற்குக் கடினமாக உழைக்க வேண்டும்.
b. செலவைக் கவனமாக மேலாண்மை செய்தால் வரவு குறைவானாலும் எவ்விதத் துன்பமுமின்றி வாழ முடியும்.
c. வரவு எத்தகையதாயினும் செலவின் பெருக்கத்தை முழுமையாகக் கட்டுப்படுத்துக.
d. வரவு, செலவு இரண்டையும் அதிகரித்துக் கொள்ள வேண்டும்.

Check Answer

8. அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார் என்பும் உரியர் பிறர்க்கு இக்குறள் உணர்த்தும் அன்பிலார் செயல் யாது?

a. பிறர்க்கு எல்லாம் கொடுத்தல்
b. பிறர் துன்பம் கண்டு கண்ணீர் விடுதல்
c. எல்லாம் தமக்குரியதாகுதல்
d. இவை அனைத்தும்

Check Answer

9. ' ............. கூறல்
கனியிருப்பக் காய்கவர்ந் தற்று
இக்குறளில் திருவள்ளுவர், எதைக் கூறுவது கனியிருக்கும் போது காயைக் கவர்வதற்கு ஒப்பாகும் என்கிறார் ?

a. உண்மையிருக்கப் பொய்மை கூறல்.
b. இம்மை இருக்க மறுமை பற்றிக் கூறல்.
c. இனியவை இருக்க இன்னாதது கூறல்.
d. அடக்கமுடமைக்குப் பதிலாக அடக்கமின்மை பற்றிப் பேசுவது.

Check Answer

10. '....... யிவ்விரண்டும்
கண்ணென்ப வாழு முயிர்க்கு
மேற்காணும் திருக்குறளில் எவை இரண்டை திருவள்ளுவர் கண்களுக்கு ஒப்பாகக் கூறுகிறார்?

a. அறமும் பொருளும்
b. நடுவு நிலைமையும் அடக்கமுடைமையும் –
c. பொருளும் இன்பமும்
d. எண்ணும் எழுத்தும்

Check Answer

11. '.....துணிக கருமம் துணிந்தபின்
......... என்ப திழுக்கு
எவ்வாறு ஒரு செயலில் ஈடுபட வேண்டும் என திருவள்ளுவர் மேற்கூறிய குறளில் அறிவுறுத்துகிறார்?

a. நிறையப் பொருள் சேர்த்த பிறகு
b. தானம் செய்த பிறகு
c. நன்றாகச் சிந்தித்து அதற்குப் பிறகு
d. தக்க காலமறிந்து

Check Answer

12. பின்வருவனவற்றுள் திருக்குறளில் இல்லாத இயல்பு எது?

a. மதச்சார்பின்மை
b. இரக்கம்
c. அனைத்தையும் உள்ளடக்கிய சிந்தனை
d. சில மன்னர்களின் பெயர்களைக் குறிப்பிடுவதும், அவர்களின் தனிப்பட்ட வீரத்தைப் பறைசாற்றுவதும்.

Check Answer

13. மதச்சார்பற்ற இலக்கியம் என்ற வகையில் திருக்குறளின் முக்கியத்துவம் யாது?

a. எந்த ஒரு குறிப்பிட்ட மத மதிப்பீட்டிற்கான இலக்கியமாகவும் இல்லாது மானுடம் முழுமைக்கும் பொருந்தும் தனித்துவம்.
b. மானுட நலனை முன்நிறுத்தும் தனித்துவம்.
c. திருக்குறள் வாசிப்பு நமது நாட்டை கட்டமைத்த தலைவர்களின் மதச் சார்பற்ற தன்மையை வலிமைப்படுத்தியது.
d. மேற்கண்ட அனைத்தும்.

Check Answer

14. '……………. நாகாக்க காவாக்கால்
சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு
மேற்கூறிய திருக்குறளில் திருவள்ளுவர் நாவடக்கத்தை பற்றி கூறுகிறார் - இப்பண்பு எவருக்குப் பொருந்தும் ?

a. பொருள் உடையவருக்கு
b. பொருள் அற்றோருக்கு
c. நல்லோருக்கு
d. அனைவருக்கும்

Check Answer

15. "சொல்லுக சொல்லைப் பிறிதோர்சொல் அச்சொல்லை
வெல்லுஞ்சொல் இன்மை அறிந்து"
- "அச்சொல்லை " என திருவள்ளுவர் உரைப்பது எதை ?

a. நீங்கள் பயன்படுத்திய பொருளில் வேறொரு சொல்.
b. சொல்லுக்கு மாற்றாக வேறுசொல்.
c. நீங்கள் பயன்படுத்திய சொல்லுக்கு வேற்றுமொழிச் சொல்.
d. மற்றவர்களால் வெல்ல முடியாத உங்களுடைய சொல்.

Check Answer

16. அன்புஈனும் ஆர்வம் உடைமை அதுஈனும் நண்பு என்னும் நாடாச் சிறப்பு இக்குறளின் பொருள் உணர்த்தும் பொருத்தமான தொடரை எழுதுக.

a. அன்பு விருப்பத்தைத் தரும்
b. அன்பு வெறுப்பை தரும்
c. அன்பு பொறுமையைத் தரும்
d. இவை அனைத்தும்

Check Answer

17. குறள் குறித்த சிறந்த விளக்க உரையினை உருவாக்கியவர் யார்?

a. கம்பர்
b. அகஸ்தியர்
c. பரிமேலழகர்
d. காளமேகப்புலவர்

Check Answer

18. என்பி லதனை வெயில்போலக் காயுமே அன்பி லதனை அறம் இக்குறளில் வருந்தும் என்ற பொருளைத் தரும் சொல்

a. வெயில்
b. அறம்
c. காயும்
d. இவை அனைத்தும்

Check Answer

19. அன்பிற்கும் உண்டோ அடைக்கும்தாழ் ஆர்வலர் புன்கணீர் பூசல் தரும் இக்குறளில் எதைத் தாழ்ப்பாளால் அடைக்க முடியாது என்று கூறப்படுகின்றது?

a. கண்ணீர்
b. அன்பு
c. நட்பு
d. இவை அனைத்தும்

Check Answer

20. பணிவுடையன் இன்சொலன் ஆதல் ஒருவற்கு அணியில்ல மற்றுப் பிற-இக்குறள் குறிப்பிடும் உண்மையான அணிகலன் எது?

a. அழகுக்காக அணியும் ஆபரணங்கள்
b. பணிவும் இன்சொல்லும்
c. கடுஞ்சொற்களைப் பேசாதிருத்தல்
d. இவை அனைத்தும்

Check Answer

## Answers

1. புறத்துறுப்பு எல்லாம் எவன்செய்யும் யாக்கை அகத்துறுப்பு அன்பி லவர்க்கு
2. (i) மட்டும்
3. அறத்திற்கும் மட்டும் அன்று மறத்திற்கும் அன்பு துணை நிற்கும்
4. வாய்மை
5. அருமையான உயிர்
6. அன்பகத்து இல்லா உயிர்வாழ்க்கை வன்பாற்கண் வற்றல் மரம்தளிர்த் தற்று
7. செலவைக் கவனமாக மேலாண்மை செய்தால் வரவு குறைவானாலும் எவ்விதத் துன்பமுமின்றி வாழ முடியும்.
8. எல்லாம் தமக்குரியதாகுதல்
9. இனியவை இருக்க இன்னாதது கூறல்.
10. எண்ணும் எழுத்தும்
11. நன்றாகச் சிந்தித்து அதற்குப் பிறகு
12. சில மன்னர்களின் பெயர்களைக் குறிப்பிடுவதும், அவர்களின் தனிப்பட்ட வீரத்தைப் பறைசாற்றுவதும்.
13. மேற்கண்ட அனைத்தும்.
14. அனைவருக்கும்
15. மற்றவர்களால் வெல்ல முடியாத உங்களுடைய சொல்.
16. அன்பு விருப்பத்தைத் தரும்
17. பரிமேலழகர்
18. காயும்
19. அன்பு
20. பணிவும் இன்சொல்லும்